


இதயதுடிப்பு நின்ற நிலையில் சென்னை மியாட் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று உயிர் பிழைத்த வாலிபர் பாலாஜி, டாக்டர்களுக்கு நன்றி தெரிவித்தபோது எடுத்த படம். அருகில் மியாட் ஆஸ்பத்திரியின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ் மற்றும் டாக்டர்கள் உள்ளனர்.

# வாலிபரின் நின்று போன இதயத்துடிப்பு மீண்டும் இயங்கியது

## மியாட் மருத்துவமனை டாக்டர்கள் சாதனை

. சென்னை, மார்ச்.29-
உயர் அழுத்த மின்சாரம் தாக்கியதில், 15 நிமிடம் இதயதுடிப்பு இல்லாமலும், மூளைக்கு ரத்தம் செல்லாத நிலையிலும் மியாட் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவர் மீண்டும் உயிர் பிழைத்தது மருத்துவ உலகில் மிகப்பெரிய அதிசயத்தை ஏற்படுத்தியுள்ளது.

### இதயம் துடிக்கவில்லை

சென்னையை சேர்ந்த பாலாஜி. நடனப்பள்ளி ஆசிரியர். தன்னுடைய நடனப் பள்ளிக்கு விளம்பரம் செய்வதற்காக கடந்த பிப்ரவரி மாதம் 5-ந்தேதி "பிளக்ஸ் போர்டு" பொருத்தும்போது, அருகில் இருந்த உயர் அழுத்த மின்கம்பியில் கைப்பட்டதால், தூக்கி வீசப்பட்டார்.

அவரை உறவினர்கள் ''ஆம்புலன்ஸ்'' மூலம் மியாட் ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்தனர். அப்போது அவரது இதயம் துடிக்கவில்லை. மிகவும் அபாயகரமான நிலையில் இருந்த பாலாஜிக்கு, மியாட் மருத்துவமனை டாக்டர்கள் தீவிர முயற்சி எடுத்து சிகிச்சை வழங்கினர். பாலாஜி சுயநினைவு இன்றி அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவரது இதயம் 15 நிமிடங்களாக துடிக்கவில்லை. அவரது மார்பு கூட்டினை அழுத்தியும், மின் அதிர்வு சிகிச்சை வழங்கியும் அவரது உயிரை காப்பாற்ற டாக்டர்கள் போராடினார்கள்.

### டாக்டர்கள் போராட்டம்

10 நிமிட போராட்டங்களுக்கு பின் அவரது இதயம் துடிக்க தொடங்கியது. ஆனால் இதய துடிப்பு சொற்பமாகவும், நலிவுற்றும் இருந்தது. அவரது ரத்த அழுத்த நிலை ஓரளவு சீராகியது.

அவருக்கு 'லைப் சப்போர்ட்' சாதனங்கள் மற்றும் அதிகபடியான மருந்துகளை கொடுத்தும், அதுவும் அவருக்கு போதவில்லை. அவருக்கு மீண்டும் மாரடைப்பு ஏற்பட்டது. டாக்டர்கள் தீவிரமாக போராடி அவரது இதயத்தை துடிக்க வைத்தனர்.

பின்னர் இதய துடிப்பை கண்காணித்தபடி, தமனிகள் மற்றும் முக்கியமான நாளங்களுக்கு 'கேன்யுலேட்' என்ற சிகிச்சை வழங்கப்பட்டது. அவரது மூளை சேதம் அடைவதை தடுப்பதற்காக 'ரெப்யூட்டிக் ஹைபோதெர்மியா' என்ற சிகிச்சை அளிக்கப்பட்டது. அதாவது உடலை ஐஸ் கொண்டு மூடப்பட்டு செய்யும் சிகிச்சை தொடர்ந்து 36 மணி நேரம் வழங்கப்பட்டது.

### உடல்நிலை முன்னேற்றம்

பாலாஜியின் இதய துடிப்பும், சுவாசமும் சீராக இருந்தாலும், உடலில் உணர்வுகள் இல்லை. மூளைக்கு ரத்த ஓட்டம் முற்றிலுமாக தடைப்பட்டிருந்தது. 10 நிமிடம் ரத்த ஓட்டம் தடைப்பட்டாலும், மூளைக்கு நிரந்தர சேதங்கள் ஏற்படும். இதற்கிடையில், அவருக்கு வழங்கப்பட்டு வந்த மயக்க மருந்து நிறுத்தப்பட்டதும், வலிப்பு ஏற்பட்டது. கிட்டத்தட்ட 2 வார சிகிச்சைக்கு பின்னர், பாலாஜியின் உடல் நிலையில் முன்னேற்றம் காணப்பட்டது.

கண்களை திறந்து பார்த்தார். இதையடுத்துடாக்டர்கள் தொடர்ந்து போராடி பாலாஜிக்கு ஏற்பட்ட வலிப்பை நிறுத்தினார்கள். ஆனால் அவரது கை, கால்கள் செயல்படவில்லை. தொடர்ந்து வழங்கப்பட்ட சிகிச்சையினால், கைகள் மட்டும் அசைந்தது.

### மறு ஜென்மம்

பின்னர் படிப்படியாக முன்னேறி பாலாஜி பேச தொடங்கினார். இப்போது ஊன்று கோல் உதவியுடன் அவர் நடக்க தொடங்கியுள்ளார். இதுகுறித்து பாலாஜியின் உறவினர்கள், நண்பர்கள் கூறும் போது, "இதயம் 15 நிமிடங்கள் துடிக்காமல், மூளைக்கு ரத்தம் செல்லாமல் முற்றிலும் இறந்து விட்ட நிலையில் இருந்து மீண்டும் உயிர் பிழைத்தது வருவார் என்று நாங்கள் நினைத்துக்கூட பார்க்கவில்லை. டாக்டர்களின் தீவிர சிகிச்சையினால், பிழைத்து வந்தது. பாலாஜிக்கு மறு ஜென்மம் தான்'' என்று கூறினார்கள்.

பாலாஜிக்கு சிகிச்சை வழங்கிய மியாட் மருத்துவமனை டாக்டர்களோ, "நாங்கள் செய்தது சேவை மட்டும்தான். வேறொன்றும் இல்லை'' என்று கூறினார்கள்.